**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.317/2018**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr.T.Maheshraja, Gr. III Bench Clerk of this court, on 01.09.2026 in accordance with the provisions of Oaths Act 44 of 1969.

Name : முருகேசன் Father's Name : பழனி

துவக்க நேரம்: 01.14 P.M.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது சொந்த ஊர் எது என்றால் தம்மம்பட்டி. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்திருந்த முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் கூறியதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தின் தென்புறத்தில் எனது நிலம் உள்ளதாக கூறியுள்ள நிலையில், எனது நிலத்தின் சர்வே எண் என்ன என்றால் ச.எண்.1004 ஆகும். மேற்படி நிலத்திற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இல்லை என்றாலும், வாதி அழைத்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) வாதிகள், பிரதிவாதிக்கு எதிராக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தடப்பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளார்கள். பிரதிவாதியின் பட்டா நிலத்தில், வாதிகள் தடம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தம்மம்பட்டி - திருச்சி மெயின்ரோட்டிலிருந்து கிழக்கு நோக்கி சென்று, வாதிகளின் வீடு வரை தாவா பாதை அமைந்துள்ளதாக கூறியுள்ள நிலையில், அவ்வாறு எந்த இடத்தில் பிரிந்து செல்கிறது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன், குமார் நிலத்திலிருந்து பாதை

பிரிகிறது. நான் சொல்வது தவறு என்றாலும், எனது நிரூபண வாக்குமூலத்தில் அவ்வாறு குமார் நிலத்திலிருந்து பிரிந்து செல்வதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்தான வண்டிப்பாதை, எந்தெந்த சர்வே எண்களில் எந்த அளவு அமைந்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் 12 அகல பாதை செல்கிறது. எனது நிரூபண வாக்குமூலத்தில் அவ்வாறு 12 அடி அகலத்தில் பாதை செல்வதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாதிகள் நிலத்தின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பூர்வீக சொத்து ஆகும். வழக்குரையின் சொத்து விவரத்தில், வாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் வாதிகளுக்கு சொந்தமான சொத்து விவரம் இந்த வழக்கில் காட்டப்படவில்லை என்றாலும், வழக்கின் விவரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) வாதி நடராஜன் குடும்பத்தில் குடும்ப சொத்துக்கள் பாகம் பிரித்துக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் பொதுஷராவில், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்திலேயே செல்லும் வண்டிப்பாதையைத்தான் அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே வாதிகளுக்கு அவர்களது நிலத்தில் செல்லும் வண்டிப்பாதையை பயன்படுத்திக்கொள்ளும் உரிமைதான் உள்ளது என்றாலும், பிரதிவாதியின் பட்டா நிலத்தில் செல்லும் தாவா வண்டிப்பாதையை பயன்படுத்த எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

5) 2ம் வாதி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து பற்றிய விவரம் தெரியுமா என்றால் 2ம் வாதி பெயரில் கிரையம் எதுவும் வாங்கவில்லை, அனைத்தும் பூர்வீக சொத்துதான். நான் சொல்வது தவறு என்றாலும், 2ம் வாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.2 ஆக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு வழக்கு பற்றிய எந்த விவரங்களும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தில், 2ம் வாதி கிரையம்

பெற்ற நிலத்திற்கு ச.எண்.332/10C- ல் உள்ள நிலத்தின் வழியாக செல்லும் வண்டித்தடத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எனவே 2ம் வாதிக்கும் பிரதிவாதியின் பட்டா நிலத்தில் பாதை கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

6) எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள பிரதிவாதியின் தந்தை செங்கமலை கவுண்டர் கடந்த 1996ல் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில், தாவா பாதை பொதுப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ள நிலையில், மேற்படி கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் தாவா வண்டிப்பாதை, 100 ஆண்டுகளாக வாதிகளின் பயன்பாட்டில் இல்லை என்றாலும், தாவா பாதையானது பிரதிவாதி அவரது நிலத்தை கிரையம் பெற்ற பின்னர் அவரது சொந்த பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட பாதை என்றாலும், அதில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

7) கடந்த 1996ல் செங்கமலை கவுண்டர் கிரையம் பெற்ற ஆவணத்தில் (வா.சா.ஆ.3) குறிப்பிடப்பட்டுள்ள பாதை, தாவா பாதை இல்லை என்றாலும், அது வேறு பாதை என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் பாதை எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றாலும், எனவே அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதை தாவா பாதை இல்லை என்றாலும் சரியல்ல. திருச்சி - தம்மம்பட்டி மெயின்ரோட்டிலிருந்து பிரதிவாதியின் நிலம் வரையில் செல்லும் பாதையின் குறுக்கே எத்தனை ஓடைகள் செல்கிறது என்றால் மூன்று ஓடைகள் செல்கிறது. தாவா பாதை சம்மந்தமாக வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் எந்த ஆண்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் கடந்த 1998ல் பிரச்சனை ஏற்பட்டது. நான், எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள், பிரதிவாதிக்கு ஏற்பட்ட பிரச்சனையை நான் தடுத்ததாக கூறியுள்ள நிலையில், மேற்படி விவரத்தை வாதி அவரது வழக்குரையில் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார்.

8) நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் வாதிகள், பிரதிவாதிக்கு இடையே தாவா பாதை தொடர்பாக நடைபெறவில்லை என்றாலும், நான், அவர்களை சமரசம் செய்துவைக்கவில்லை என்றாலும், தாவா வண்டிப்பாதையை வாதிகள் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை என்றாலும், நான்

வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகளுக்கு பாகப்பிரிவினை பத்திரம், கிரைய ஆவணம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பயன்படுத்த மட்டுமே உரிமை உள்ளது என்றாலும், பிரதிவாதி தனது நிலத்தில் அமைந்திருந்த பாதையை பயன்படுத்த வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல், தாவா பாதையை வாதிகள் எப்பொழுதும் பயன்படுத்தியதில்லை என்றாலும், வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

முடிவு நேரம்: 01.47 P.M.

Sd/-D.Jansirani
Principal District Munsif (FAC), Attur

Typed by Tmt.V.Amaravathi - O.S.No.317/2018, Dt.01.09.2026.